# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# சிம்சோன், தேவனின் பலத்த மனிதன்


எழுதியவர் : Edward Hughes
சித்தரிப்பவர் : Janie Forest
மொழிபெயர்ப்பாளர் : Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர் : Lyn Doerksen



**கதைகள்** 60 **ல்** 14

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*



உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


Tamil

பல நாட்களுக்கு முன்னால், இஸ்ரவேல் நாட்டில், மனோவா என்ற ஒரு மனிதன் இருந்தான். அவனுக்கும், அவன் மனைவிக்கும் பிள்ளைகளில்லாதிருந்தது.



1

ஒரு நாள் தேவதூதன் மனோவாவின் மனைவிக்கு தன்னை காண்பித்தான். "உங்களுக்கும் விசேஷமான ஒரு குழந்தை பிறக்கும்" என்று சொன்னான்.



2

அந்த அற்புதமான செய்தியை அவள் கணவனிடத்தில் சொன்னாள்.  "ஆ என்னுடைய தேவனே ... திரும்பவும் எங்களிடத்தில் வாரும்.  அந்த குழந்தைக்கு என்ன செய்ய வேண்டுமென எங்களுக்கு கற்பித்தருளும்" என்று மனோவா வேண்டுதல் செய்தான்.



3

தேவதூதன் மனோவாவை நோக்கி அந்தக் குழந்தை ஒருபோதும் சவரம் பண்ணக்கூடாது, திராட்சரசம் குடிக்கக் கூடாது, மற்றும் சிலவகையான உணவுகளை சாப்பிடக்கூடாது என்றான்.



4

தேவன் அந்தக் குழந்தையை நியாயாதிபதியாக தெரிந்தெடுத்திருக்கிறார்.  அவன் இஸ்ரவேலை நடத்துவான்.



5



தேவனுடைய பிள்ளைகளுக்கு உண்மையிலே உதவி தேவைப்பட்டது.  அவர்கள் தேவனை தங்களுடைய வாழ்க்கையிலிருந்து விட்டுவிட்டபடியால், பெலிஸ்தியரான அவர்களுடைய எதிரிகள் அவர்களை சங்கடப் படுத்தினார்கள்.

6



ஆனால் அவர்கள் வேண்டுதல் செய்தபோது தேவன் கேட்டார்.  தேவன் இந்தக் குழந்தையை அனுப்பினார்.  அவன் உலகத்திலே பலமுள்ள மனிதனாக காணப்பட்டான்.

7

"அந்த பெண் ஒரு குழந்தையை பெற்று அவனை சிம்சோன் என்று அழைத்தார்கள்: அந்தக் குழந்தை வளர்ந்தது, தேவன் அவனை ஆசீர்வதித்தார். தேவனுடைய ஆவியானவர் அவன் மேல் அசைவாட ஆரம்பித்தார்."



8

சிம்சோன் மிகுந்த
பயூசாலியானான்.
ஒரு நாள் தன்னுடைய
வெறுங்கைகளால்
ஒரு சிங்கத்திடம்
சண்டையிட்டு அதை
கொன்றுபோட்டான்.



9



பின்பு, சிம்சோன் அந்த சிங்கத்தின்
செத்த உடலில் தேனீக் கூட்டம்
கூடுகட்டியிருந்த தேனை சாப்பிட்டான்.

10



அவன் ஒரு விடுகதையை சொன்னான்,
"பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும்,
பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது."

11



யாராலும் அதற்கு பதில்
சொல்லமுடியாமற்போனாலும் -
சிம்சோனின் புதிய மனைவி, ஒரு பெலிஸ்திய
பெண், அதை நண்பர்களுக்கு சொன்னாள்.
இது சிம்சோனை மிகவும் கோபப்படுத்தியது.

12

அவனுடைய மனைவியை அவனுடைய சிறந்த சினேகிதனுக்கு
மனைவியாக கொடுத்ததினால் அவன் மிகவும் கோபப்பட்டான்.
அவர்களை பழிவாங்க நினைத்தான். ஆனால் எப்படி?
முதலாவது, சிம்சோன் 300 நரிகளைப் பிடித்தான். பின்பு
இரண்டு இரண்டாக அவைகளின் வால்களை கட்டி
அவைகளின் நடுவே
பந்தத்தை
வைத்து
கட்டினான்.



13

பின்பு சிம்சோன் அவைகளை பெலிஸ்தியரின்
வெள்ளாண்மைகளுக்குள் விட்டான்!



14

இப்போது பெலிஸ்தியர் பழிவாங்க வேண்டுமென்றார்கள். சிம்சோன் தன்னைக்கட்டி, பெலிஸ்தியரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு கொலை செய்யப்பட விட்டுவிட்டான்.



15

ஆனால் தேவனுடைய ஆவியானவர் சிம்சோன் மேல் வந்தார். அவன் கயிறுகளை அறுத்து விட்டு, கழுதையின் தாடி எலும்பைக் கொண்டு 1000 பகைஞரை கொன்றுபோட்டான்.



16

பெலிஸ்தியரின் கும்பல் சிம்சோனை தேடி கண்டுபிடித்தது. ஓர் இரவு, ஒரு பட்டணத்திற்குள்ளாக அவனை சிக்கவைத்து பட்டணத்தின் கதவை பூட்டினார்கள்.



17

ஆனால் சிம்சோன் பட்டணத்தின் கதவுகளை தன்னுடைய தோள்களில் தூக்கிக்கொண்டு - வெளியே நடந்து வந்தான்.



18

ஆனால் சிம்சோன் தேவனை விட்டுவிட்டான். அவன் அவருக்கு கீழ்ப்படியும்வரை அவனுக்கு பெலத்தை கொடுத்தார். ஒரு நாள், தன்னுடைய சரீர பெலத்தின் இரகசியத்தை, தெலீலால் என்ற பெலிஸ்திய வேவுகார பெண்ணிடம் சொல்லிவிட்டான்.



19

அவன் தூங்கிக் கொண்டிருக்கும் போது, ஒரு மனிதனைக் கொண்டு அவன் தலைமுடியை சவரம் பண்ணினாள்.



20


பின்பு பெலிஸ்திய போர்ச்சேவகர்கள் தெலீளாலின் படுக்கை அறையிலே சிம்சோனை தாக்கினார்கள். சிம்சோன் எவ்வளவோ எதிர்த்து பார்த்தான்.
21


ஆனால் அவனுடைய பெலம் அவனிடத்தில்லை. அவனுடைய கண்ணை அவனுடைய எதிராளிகள் பிடுங்கினார்கள்.
22


குருடனாய், பலவீனனாய் சிம்சோன் பெலிஸ்தியரின் அடிமையாக மாறினான். தேவனுடைய ஊழியக்காரனை அவர்கள் பரிகசித்து நகைத்தார்கள்.
23


பெலிஸ்தியர் ஒரு விருந்து பண்ணினார்கள். அவர்கள் தங்கள் மீன் தேவனான தாகோன் சிம்சோனை தங்களுடைய கையில் கொடுத்ததற்காக துதித்தார்கள். அந்த தாகோரின் கோயிலில் குடித்து வெறித்தார்கள். தங்களுக்கு வித்தை காண்பிக்க சிம்சோனை அழைத்து வந்தார்கள்.
24


ஒரு பையன் சிம்சோனை அழைத்து வந்து, தேவாலயத்தை தாங்கி நின்ற தூண்களில் சாய்ந்து நிற்கும்படி விட்டான்.
25


அங்கு 3000 க்கும் அதிகமான பெலிஸ்தியர்கள் ஆலயத்தின் மேற்பரப்பிலும், மற்றும் அநேகர் உள்ளேயும் இருந்து சிம்சோனை கிண்டல் பண்ணினார்கள்.
26

ஆனால் சிம்சோனின் தலைமயிர் சிறைச்சாலையில் உள்ளபோது வளரத் தொடங்கியது.



27

இப்போது அவன் ஜெபித்தான், "ஆ என் தேவனே, இந்த ஒரு முறை மாத்திரம் என்னை பெலப்படுத்தும், என்னுடைய இரண்டு கண்களுக்கு பதிலாக பழிவாங்கிக் கொள்கிறேன்."



28

தேவன் சிம்சோனுக்கு திரும்பவும் பெலனை கொடுப்பாரா? சிம்சோனால் இந்த முடியாத காரியத்தை செய்ய முடியுமா? ஆம்! ஆம்!



29

தன்னுடைய பெலத்தைக்கூட்டி, சிம்சோன் பெரிய தூண்களை பிளந்து போட்டான். தாகோனின் ஆலயம் தரைமட்டமானது மல்லாமல் ஆயிரத்துக்கும் அதிகமானாரோடு சிம்சோனும் மடிந்துபோனான்.



30

சிம்சோன், தேவனின் பலத்த மனிதன்

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

நியாயாதிபதிகள் 13 -16

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.